**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : CC.No.111/2021</u>**

**<u>வழக்கு சாட்சி PW-12</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமசாமி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | பரமசிவம் | தொழில் | : | தலைமைக்காவலர் |
| கிராமம் | : | தென்காசி | வயது | : | 49 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 20th, 2026.

**(எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் தனிப்பிரிவு அலுவலராக பணியாற்றி வருகிறேன். நான் கடையநல்லூர் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணியில் இருந்தபோது, கடந்த 22.07.2019ம் தேதி, 20.15 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது, கடையநல்லூர் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் படி, மருத்துவமனை சென்று சரண்யா என்பவர் கொடுத்த புகார்வாக்குமூலத்தை பதிவு செய்து, நிலையம் வந்து அதன் தன்மைப்படி 20.30 மணிக்கு காவல் நிலைய குற்றஎண்.286/2019, சட்டப்பிரிவுகள் 341, 294(பி), 324, 506(2) இதச மற்றும் Sec 4 of TNPHW Act-ன் படி முதல் தகவல்அறிக்கை பதிவு செய்து, அதன் அசலை தென்காசி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், ஒரு நகலை காவல் ஆய்வாளர்

பார்வைக்கும் வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.10 ஆகும். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

முதல் தகவல் அறிக்கையில் காலம் 15ல் 22.07.2019 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்திற்கு 24.07.2019 அன்று 2 நாட்கள் கழித்து காலதாமதத்துடன் வரப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(முதல் தகவல் அறிக்கை படிவத்தின் ஒருபக்கம் வழக்கு கோப்பில் இல்லை என்பதினால் விசாரணை பாதியில் நிறுத்தப்பட்டது.)

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.01.21 15:18:04 +0530